ISSN : 2349 - 1914



# நேடே இதழ்

## பன்னாட்டு ஆய்விதழ்

## International Journal

நவம்பர் 2025 மலர் – 12 இதழ்–11

ISSN : 2349 - 1914

## ஆசிரியர் குழு

- முனைவர் **மதுரை வீரன்** மாநிலக் கல்லூரி, சென்னை.
- முனைவர் **நீல.மாதவன்** காஞ்சி சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- முனைவர் **மு.சற்குணவதி,** முனைவர் **ஆ.ஏகாம்பரம்**
  சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- முனைவர் **ந. கலைவாணி,** முனைவர் **மா.லோகநாயகி**
  இராணிமேரி கல்லூரி, சென்னை.
- முனைவர் **மு. கலைமாமணி,**
  அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.
- **திருமதி. சி. சுப்புலெட்சுமி**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- திருமதி. விஜயராணி மூர்த்தி
  1,Strathmore Road Singapore 148800
- **திருமதி. தமிழரசி சுப்பிரமணியம்**
  Master Teacher for Tamil Language,Language Centre, 2 Beatty Road, Singapore
- **Mrs Silambayee Muthusamy**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- முனைவர் **ப.கமலக்கண்ணன்** முனைவர் **சி.அங்கயற்கண்ணி**
  சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.
- **ம.பிரகாஷ், அ.ரேவதி**
  ஆய்வாளர்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- **த. இராஜீவ் காந்தி**
  ஆய்வாளர், இராணிமேரி கல்லூரி, சென்னை.
- Mr. **Srinivasan Ramachandran**
  Dr. Ambedkar Centre for Economic Studies, University of Madras. Chennai.
- **Dr. S. Sivakumar**
  Dr. Ambedkar Govt. Law College, Madras High Court Campus, Chennai.

## வடிவமைப்பு

**வி.ஷீலா**

Owned, Printed and Published by R. Babu from No: 192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-5 Printed at Today Printers,192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-600 005 Editor. R. Babu

அலுவலகம்

192, பெல்ஸ் சாலை, எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன். : 044–28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

டுடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்) ISSN : 2349 - 1914


14. சங்க இலக்கியத்தில் மருத்துவம்

– தி. கல்பனாதேவி 72

15. ஈழத்தின் தமிழிசை மரபு

– த. ராபாட் அருட்சேகரன் 81

16. மகளிர் மேம்பாட்டில் மணவளக்கலையின் பங்கு

– சு. இராஜேஸ்வரி முனைவர் சு. பிரசாத் 87

17. கலைஞரின் பராசக்தி திரைப்பட வசனம் ஒரு பார்வை

– விஜயலட்சுமி 91

18. தமிழ்த் திரைப்பாடல்கள் காட்டும் சமுதாய மரபுகள்

– வெ. கணேசன் 95

19. சித்தர்களின் உலகம்

– இர. இராஜராஜேஸ்வரி 100

20. அண்ணலாரும் அரசியலும்

– ஹாஜா முஹினுதீன் 104

21. டி.கே.சி. ஜஸ்டிஸ் மகாராசனுக்கு எழுதிய மடல்கள்

– லி. செல்வமீனா 107

22. சுவிசேஷ தென்றல் ராபர்ட் பாடல்களில் இறையியல் சிந்தனை

–தே. யோசுவா 110

23. அம்பையின் படைப்பும் ஆளுமையும்

– கோ. பூர்ணிமா & முனைவர் சு. சாந்தி 113

24. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் வழி சிலப்பதிகாரம்

– செ. மஞ்சு & முனைவர் சு. சாந்தி 117

25. பழந்தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்கள்

– திருமதி ஜெனோவா & முனைவர் சு. சாந்தி 124

 ISSN : 2349 - 1914

# பழந்தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்கள்

திருமதி ஜெனோவா
முனைவர் சு. சாந்தி
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை.

**முன்னுரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களால் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்னும் கோட்பாடு எடுத்துரைக்கப்பட்டது. தமிழர் வாழ்வியல் பண்பாடும், நாகரிகமும் மரபு சார்ந்த ஒன்றாகும். தமிழர் பண்பாட்டின் நிலைக் களனாய் சிகரமாய் வாழ்ந்து சிறந்தவர் அக்காலப் பண்பாடு போற்றத்தக்கதாகும், வாழ்வின் வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கதாகும். இதற்கான சான்றாதாரங்களை ஆராய்வதன் மூலம் பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை விழுமியங்களை ஆராய்ந்து வெளிக் கொணர முடியும்.

**பண்பாடு – விளக்கம்**

'பண்பாடு' என்ற சொல் 'பண்படு' என்ற கூட்டு வினைச்சொல்லிலிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். இதனை ஆங்கிலத்தில் உரடவரசந என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். ஆதிகாலத்தில் குகைகளில் தனித்து வாழ்ந்த மனிதனை சமுதாயத்தோடும் இணைந்து வைத்ததே பண்பாடுதான் பண்பாடு என்ற சொல் பண்பாடுதல் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. 'பண்' என்பது பாடல் அல்லது இசை என்னும் பொருள்படும். 'பாடு' என்பது 'படு' என்பதன் நீட்டல் விகாரம் படு என்பது செம்மைபடுத்துவது என்னும் பொருள்படும். மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதும் பண்பாடுதான். உலகில் தோன்றிய ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான பண்பாடு உள்ளது. மனிதன் தமிழ் பண்பாடு என்ற சொல்லை 1937–ஆம் ஆண்டு டி.கே. சிதம்பரம் முதலியார் அவர்கள் அறிமுகப்படுத்தினார். தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கு உரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள்.

**"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"**

**(கலித்தொகை)**

என்று கலித்தொகை பாடல் வழி சுட்டிக் காட்டுகின்றது. பண்பாடு என்பது "அகப்பண்பாடு, புறப்பண்பாடு" என்று இருவகைப்படும். உணவு, உடை, உறையுள் போன்றவை புறப்பண்பாடு. இது ஒரு வகையில் இன்றைய நாகரிகத்தில் அடங்கும். செ.வைத்தியலிங்கம் அவர்கள் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மெய்யுணர்வு, தெய்வநம்பிக்கை, அருள், புலனடக்கம், நன்றி, சீலம் போன்ற அடிப்படையில் உணர்வது அகப்பண்பாடு என்று கூறுகிறார். முறையற்று காணப்படும் நிலத்தைக் கண்டு அதை சமன்படுத்துவது மேலும் அதனை சீரமைப்பது பண்படுத்துதல் என்கிறோம். நெறி பிறழ்ந்து நடக்கும் மனிதனை தீயசெயல், எண்ணம் ஆகியவற்றை மாற்றி நடைமுறை வாழ்வியலுக்கு மனதைப் பண்படுத்துதல் பண்பாடு என்கிறோம். இதனை,

**"பண்பெனப்படுவது பாடறித் தொழுகல்"**

**(கலி–133)**

**"பணனும் பண்பும் பாடறிந்து ஒழுகல்"**

**(நற்–160)**

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

திருவள்ளுவரும் பண்பு பற்றி கூறுகையில்,

**"அறம்போலும் கூர்மையே ரேனும்**
**மரம்போல்வர்**
**மக்கட் பண்பு இல்லாதவர்."**

**(திருக்குறள்–997)**

ISSN : 2349 - 1914

என்று தனது குறள் வழியில் குறிப்பிடுகிறார் வள்ளுவன். பண்டைய தமிழ் மக்களின் பண்பினை அறிவதற்கு தமிழ் இலக்கியங்களே சான்றாக அமைகின்றன. உலகம் நல்வழியில் இயங்குவதற்கு பண்பாடு அல்லது பண்புடையார் வாழ்வது மிகவும் பயனுள்ளது.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் இதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்" (திருக்குறள்–996)**

என்பது வள்ளுவன் வாய்மொழி. அன்பும், அறனும் எங்கெங்கும் பரவிப் பெருகி வாழும் வாழ்க்கைப் பண்பும் பயனுமாக மிளிர்வது பண்பாட்டின் நோக்கமாகும். சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகையுள் ஒன்றான கலித்தொகை 'பண்பெனப் படுவது பாடு அறிந்து ஒழுகுதல்' என பண்பாட்டிற்கு இலக்கணங் கூறுகின்றது. திருக்குறளில் பண்புடைமை என்ற அதிகாரத்திற்கு விளக்கம் கூறும் பரிமேலழகர் "பண்புடைமையாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" என எடுத்துரைக்கின்றார். வள்ளுவன். 'பண்பாடு' என்ற சொல் 'பண்படு' என்ற கூட்டு வினைச்சொல்லிலிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். ஆதி காலத்தில் குகைகளில் தனித்து வாழ்ந்த மனிதனை சமுதாயத்தோடும் இணைத்து வைத்ததே பண்பாடுதான். 'பண்பாடு' என்பதற்கு பண்டைய இலக்கியங்கள் விளக்கங்கள் கூற முயன்ற ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன. பண்டைக்காலத்து மக்களின் வாழ்க்கை முறையை அறிவதற்கும் ஆராய்வத்கும் மிக்க இன்பந்தருவது சங்ககாலத்தில் நம் முன்னோர்கள் எப்படி எப்படி வாழ்ந்தார்கள், என்ன என்ன நம்மைகள் அவர்களிடம் சிறந்திருந்தன, இக்காலத்தில் வாழ்கின்ற நாம், அவர்கள் வாழ்க்கை முறைகளிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய திருத்தங்கள் என்னென்னவோ என்று அறிந்து கொள்வதற்கு நமது மனம் எவ்வளவோ வேட்கை கொள்கின்றது.

### விழுமியங்கள் பொருள் விளக்கம்

விழுமியங்கள் என்றால் ஒரு தனிநபர் அல்லது சமூகத்தின் நம்பிக்கைகள், கொள்கைகள் மற்றும் நடத்தைகளை வழி நடத்தும் அடிப்படைக் கோட்பாடுகள் அல்லது ஆதாரங்கள் ஆகும். இவை ஒரு நபர் எதை நல்லது எதைக் கேட்டது என்று கருதுகிறார், என்பதை தீர்மானிக்க உதவுகின்றன. விழுமியங்கள் என்பது ஒரு தனிநபர் அல்லது சமூகத்தின் நம்பிக்கைகள், எண்ணங்கள் மற்றும் நடத்தைகளின் அடிப்படையில் அமைந்தவை. அவை ஒருவரை எதை செய்தால் சரி, எதை செய்தால் தவறு என்று தீர்மானிக்க உதவுகின்றன. நேர்மை, உண்மை, நீதி, கருணை போன்றவைகள் சான்றுகள் ஆகும்.

### பண்பாட்டு விழுமியங்கள்

'பண்பு' என்னும் சொல்லும், பாடு என்ற சொல்லும் பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. நல்லியல்பு என்பதே 'பண்பு' எனப்படும். "பாடறிந்து ஒழுகும் பண்பினாரே" (புறம் 197:14)

**"நயனும் நண்பும் நாணும் நன்கு உடைமையும்**
**பயனும் பண்பும் பாடுஅறிந்து ஒழுகலும்"**
**(நற்றிணை 160:12)**

தலைசிறந்த வாழ்வியலுக்குத் தோற்றுவாயாக அமைகின்ற மனப்பான்மையின் வெளிப்பாடு பண்பாடு எனலாம்.

**"படைத்தகையாற் பாடுபெறும்" (குறள்: 768)**

என்னும் திருவள்ளுவரின் சிந்தனை ஒப்பிடத் தக்கதாகும். பண்படுவது பண்பாடாகும். சீர்படுதல், பண்படுத்தல் எனவும் பொருள்படும். பண்பாட்டு விழுமியங்கள் என்பவை, ஒரு சமூகத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பின்பற்றப்படும் விழுமியங்கள் ஆகும். இவை ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் கலைகளை வடிவமைக்கின்றன.

### பண்பாட்டு விழுமியங்களின் முக்கியத்துவம்

பண்பாட்டு விழுமியங்கள் ஒரு சமூகத்தின் உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான அடையாளத்தையும், நோக்கத்தையும்

 ISSN : 2349 - 1914

உருவாக்குகின்றன. இந்த விழுமியங்கள், ஒரு சமூகத்தில் எது சரியானது, எது தவறானது என்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. பண்பாட்டு விழுமியங்கள், சமூகத்தில் நடத்தை விதிகளை நிலை நிறுத்த உதவுகின்றன. ஒரு சமூகத்தின் விழுமியங்கள் அந்த சமூகம் எவ்வாறு முன்னேறுகின்றது மற்றும் அதன் எதிர்காலத்தை வடிவமைக்கிறது என்பதை தீர்மானிக்கின்றன.

**“பண்புஉடையார் பட்டுண்டு உலகம்”**
**(குறள்: 996)**

நற்பண்புகளுடன் வாழ்ந்த சான்றோர் உள்ளமையால் உலகம் நிலை பெற்று வாழ்கிறது. மானிட இனத்தின் உயர் பண்புகளால் அமைவதே பண்பாடு எனலாம். உலக நடைமுறைகளை அறிந்து அதன்படி வாழ்வதற்கு வேண்டிய நற்பண்பின் விழுமியத்தை மேற்படி காணலாம்.

**“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் போற்றுதல் என்பது புணர்த்தாரைப் பிரியாமை, பண்புஎனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்” (கலி:133:6–4)**

ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அறிவு, அன்பு, அறிவு, நிறை, முறை, பொறை முதலான பண்பாட்டு விழுமியங்களை அறியலாம்.

**வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்கள்**

பழந்தமிழர் திருமணவாழ்க்கையை இல்லறம் என்று வரையறுத்தார்கள் அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைவதே இல்வாழ்க்கை ஆகும்.

**“...அறம்புரி கற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”**
**(தொல்.கற்பியல்: 190)**

மனம் ஒன்றினையும் அன்பே இல்வாழ்வின் தலையாயபண்பு கருதினர். குற்றமற்ற அன்பினால் ஒன்றுபட்ட உள்ளமுடனும்,

**“யாக்கைக்கு உயிர்இயைந் தன்ன நட்பின்**
**அவ்வுயிர் வாழ்தல் அன்ன காதல்**
**காதல் அன்ன பிரிவறி யோளே...”**
**(அகம் : 339–12)**

உடலும், உயிருமாய் ஒன்றுபட்டு வாழ்ந்த அகவாழ்க்கை விழுமியங்களை அறிவுறுத்துகிறது.

**மேற்கண்ட சான்று**

**வினையே ஆடவர்க்கு உயிரே வான்நுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிரென...**
**(குறுந்.135–4)**

மனையறம் பேணி வாழ்தல் மகளிருக்கும், வினையறம் புரிந்து வாழ்தல் ஆடவருக்கும் உரிய இல்லற வாழ்வியல் விழுமியங்களாக வரையறுக்கப்பட்டன.

**“மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**
**முனைக்கு வரம்பாகிய வென்வேல்**
**நெடுந்தொகை” (புறம்.314:1–2)**

ஆடவர் மகளிர் பேணி காத்த அகவாழ்க்கை வாழ்வியல் விழுயங்களை மேற்காணும் பாடல் புலப்படுத்துகிறது.

**“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு**
**உதவுதல்” (கலித்.133:6)**

**“செல்வத்துப் பயனே ஈதல்”(புறம்.189:7–8)**

பழந்தமிழ் சமுதாய வாழ்வில் உயர்ந்த அறமாக கருதப்படும் ஈகை அறத்தின் மாண்புகளை பழந்தமிழர் அகவாழ்க்கை எடுத்துரைக்கிறது.

**ஈகை பண்பாட்டு விழுமியங்கள்**

பிறருக்கு கொடுத்து உதவும் பண்பே ஈகை ஆகும். ஒருவன் மிகுதியான செல்வம் உடையவனாக இருந்தால் அச்செல்வம் பிறருக்கு பயன்படும்படி வாழ்தல் தான் சிறந்த வாழ்க்கை. தன்னை நாடி பொருள்கேட்டு வந்தவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல் பண்டைய தமிழர் மரபு. பிறருக்கு உதவும்போது தான் அங்கே செல்வத்தின் பயனை அடைய முடியும். நம்மை சார்ந்த அனைவரும் வறுமை இல்லாத வாழ்க்கை வாழ செல்வம் வைத்திருப்பவர்கள் கொடை செய்தல் வேண்டும். அதன்படி தமிழன் வாழ்ந்தான் என்பதை பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**“உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரொக்குமே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புந பலவே”**
**(புறநானூறு–189)**

என்ற நக்கீரனார் பாடலில் ஈகையின் சிறப்பு கூறப்படுகிறது.

ISSN : 2349 - 1914

**தனிமனிதப் பண்பாடு விழுமியங்கள்**

பண்பாடு என்பது பண்பட்ட எண்ணமும் சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து திருந்திய நிலையாகும். எல்லோருடைய இயல்புகளும் அறித்து ஒத்த நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆகின்றார். சங்க காலத்தில் தனிமனித வாழ்க்கையில் நட்பும், பகையும், விருப்பும். வெறுப்பும், அன்பும், அன்பின்மையும் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் இடம்பெற்றன. ஆனால் சங்கப் புலவர்கள் சமுதாயப் பொதுமைக்காகவும், பண்பாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் பிறர் பழிதூற்றாமல் தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளார். இதனை,

**“நல்லது செய்தல் ஆற்றீராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்”**

என்று குறிப்பிட அறியலாம். நல்வினை செய்யவில்லையென்றால் தீவினையைச் செய்யாதீர்கள் என்று தனிமனித பண்பாட்டைச் சங்க நூல் குறிப்பிடுவதனை அறியமுடிகிறது.

**பழந்தமிழர் அகப் பண்பாட்டு விழுமியங்கள்**

பழந்தமிழ் மக்கள் அகம், புறம் என்று வாழ்க்கை முறைகளை வகுத்து வாழ்ந்தனர். களவு, கற்பு வாழ்வியல் நெறிகள் போற்றப்பட்டன. உரிமைவாழ்வு, பண்பு, நலம், மனையறமாண்புகள் வரையறுக்கப்பட்டன. கடமைஉணர்வு போன்றவைகள் அகவாழ்க்கை கற்புநெறிகள், விழுமியங்களாக “சங்ககாலம் பண்பாட்டில் வளர்ச்சி பெற்று சிறந்து விளங்கிய காலம். அக வாழ்க்கையிலும், புற வாழ்க்கையிலும் நிறைவு பெற்ற காலம், அன்றைய வாழ்வில் பண்பாடுப் போற்றத்தக்கது மட்டுமல்ல. வாழ்வுக்கு, வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கது” (முனைவர் வே.முத்துலக்குமி. பண்பாட்டு சிந்தனைகள். (ப. 30)

**மக்கட்பேற்றின் தனித்துவ விழுமியங்கள்**

பெறுதற்கரிய பேறுகளுள் தலைசிறந்த பேறு மக்கட்பேறாகும். இல்லற வாழ்விற்கு அணியாக விளங்குவது நன்மக்கட்பேறு என்பதை,

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு” (குறள் :60)**

என்ற குறள் உணர்த்துகிறது.

**“இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை யுலகமும் மறுவின் றெய்துவ**
**செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்**
**சிறுவர் பயந்த செம்ம லோர் என”**

**(அகம். 66:4)**

இம்மை வாழ்வில் இசையோடு விளங்குவதற்கும், மறுமை வாழ்வு மறுவின்றி எய்துதற்கும், காரணமாவது மக்கட் பேறு என்னும் வாழ்வியல் நம்பிக்கை விழுமியங்களை அகநானூறு மொழிகின்றது.

**“மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே”**

**(புறம்.188:6–7)**

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் செல்வவளம் மிக்கவரசயினும் மக்கட் பேரில்லாதோர் வாழ்வு பயனற்றது என்று பண்டைத் தமிழர் கருதினர்.

**“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்” (குறள்:66)**

என்னும் வள்ளுவரின் வாக்கு ஒப்பு நோக்கதக்கதாகும்.

**விருந்தோம்பல் விழுமியங்கள்**

பண்பாட்டைப் போற்றி வாழ்ந்தவர் பண்டைத் தமிழர். இன்றும் பண்பாட்டின் மரபு நிலை தொடர்கிறது. அவர்கள் போற்றிய பண்புகளில் தலையாயப் பண்பு விருந்தோம்பல். விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள். விருந்தே புதுமை என்பர் தொல்காப்பியர்.

**“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்”**

**(தொல். கற்பியல் 11)**

இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். பெண்களின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர், இல்லத் தலைவியின் கடமைகளைக் கூறும் போது விருந்தோம்பற் பண்பாட்டு விழுமியங்களை அறிவுறுத்துகிறார்.

**“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை”**

**(குறள்:49)**

**“இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம்**
**விருந்துஓம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள்:81)**

மேற்காணும் குறட்பாக்கள் வழி பழந்தமிழர் பண்பாட்டு விழுமியங்களைக் காணலாம்.

**"விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது"**
**(குறிஞ்சிப்பாட்டு: 205–207)**

விருந்தினர் உண்டு எஞ்சிய மிச்சிலை தலைவி இட தான் உண்ணுதலே தக்கது என்பதை அறிவுறுத்துகின்றது.

தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் விருந்தோம்பற் பண்பாடு, தமிழரின் அடிப்படை பண்பாடு என்றும், தொடர்ந்து வரும் பண்பாடு பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையின்மை போன்ற நெருக்கடி நிலைகள் ஏற்பட்ட போதும், இன்றும் நம் மக்கள் விருந்து போற்றுவதை தவறாது தம் கடமையாக செய்து வருகின்றனர் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்பான அன்பையும், அறிவையும் வளர்க்கும் வாயிலாக விருந்தோம்பற் பண்பாடு காணப்படுகின்றன.

**மனிதநேய விழுமியங்கள்**

பெறுதற்கரிய பிறவி மானிடப்பிறவி 'அரிது அரிது மானிடராய் பிறந்தல் அரிது' என்பார் ஔவையார் மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இப்பிறவியின் பயனை உணர்ந்து நன்றாக வாழ வேண்டும், பிறரையும் வாழ்விக்க வேண்டும்.

"மனம் பண்படும் இடம் காதல் வாழ்க்கை மனம் பண்படும் இடம் பொது வாழ்க்கை மனம் வாழும் இடமே தனி வாழ்க்கை" (ந.சுப்புரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை அன்பு, தியாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இல்வாழ்க்கை மனிதன் தன்னலம் இன்றி மனிதநேயமிக்க நல்ல பண்பாளனாக வாழ வழி வகிக்கிறது. தாம் வாழுகின்ற சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்ததனர். தம் நாட்டைப் பற்றி எண்ணாத மக்களே இல்லை. இயற்கை வளங்கள் மிகவும் குன்றினும் அந்நாட்டில் உழைப்பாளர் பெருகி அந்நாடு சிறப்புறும் என்பதை,

**"நாடுஆகு ஒன்றோ காடுஆகு ஒன்றோ;**
**அவள்ஆகு ஒன்றோ மிசைஆகு ஒன்றோர்**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் 187)**

நாட்டு மக்களின் அறிவாற்றலாலேயே உயர்வும், உழைப்பினாலேயே உயர்வு கிட்டும் என்று எடுத்துரைக்கிறது. மதிப்பும் பெற முடியும். கடுமையான நாட்டு மக்களின் அறிவாற்றலாலேயே உயர்வும், மதிப்பும் பெற முடியும். கடுமையான உழைப்பிலேயே உயர்வு கிட்டும். அதற்கு உடல் வலிவும் மன வலிவும் மிக்க ஆண்கள் தேவை.

அவர்களை ஊக்கமூட்டும் மகளிராலேயே வீடும் நாடும் உயர முடியும். எனவே எல்லாவற்றிற்கும் நாட்டு நிலையை நன்கறிந்த அறிவாற்றல் மிக்கவராக மகளிர் வாழ்தல் வேண்டும்.

சங்க காலத்தில் நாட்டின் நிலை நன்கறிந்த நாட்டுப்பற்று மிக்க அறிவு சான்ற பெண்கள் பலர் வாழ்ந்திருந்தனர். என்பதும் இன்ன பிற வாழ்வியல் விழுமியங்களையும் காணலாம்.

**முடிவுரை**

இக்கால இளைய சமுதாயம் நாட்டின் உயிர்நாடி நல்வழிப் பாதையில் வளர்ச்சியுடன் வாழ்வதற்குரிய அறநெறிகளைப் பழத்தமிழர் வாழ்வியல் நெறிகள் வழி உணரலாம். பழந்தமிழர் வாழ்வியல் வழி மனிதநேயம், சமத்துவம், அக வாழ்க்கை நெறிகள், பண்பாட்டு அறநெறிகள் போன்றவைகளைக் கண்டுணர்த்தால் வாழ்க்கை இனிக்கும், வளங்கள் பெருகும், மனிதநேயம் மாண்புறும், சமத்துவம் மலரும், உலகம் உய்வு பெறும்.

மனிதன் தனக்காக அன்றி சமூகத்திற்கும் நாட்டிற்குமாக வாழ்வதே மனிதநேயத்தின் நோக்கம். குலம், மதம், இனம், மொழி, நாடு என்ற எல்லைக்கு அப்பால் பொருளியல் சமன்பாட்டுடன் கூடிய, மாந்தர் குல ஒற்றுமையை இணைப்பதையும் பழந்தமிழர் வாழ்வியல் விழுமியங்கள் கற்பிக்கின்றன.

ருடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்) ISSN : 2349 - 1914

**துணைநூல்பட்டியல்**


1. குறுந்தொகை (சங்க இலக்கியம்). (2004). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.
2. துரைசாமி பிள்ளை. ஔவை (உ.அ). (1970). புறநானூறு (மறுபதிப்பு). கழக வெளியீடு. சென்னை.
3. பரிமேலழகர் (உ.ஆ). (2004). திருக்குறள் (முதற்பதிப்பு). மணிவாசகர் பதிப்பகம். சென்னை.
4. பாலசுப்ரமணியன் கு.வெ (உ. ஆ). (2004). நற்றிணை மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.
5. மாணிக்கனார். அ (உ. ஆ). (1999). பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற் பதிப்பு). வர்த்தமானன் பதிப்பகம். சென்னை.
6. முத்துலட்சுமி.வே. (2002). பண்பாட்டுச் சிந்தனைகள் (இரண்டாம் பதிப்பு). அனிதா பதிப்பகம். திருச்சி.
7. சுந்தரமூர்த்தி. கு. (1986). தொல்காப்பியம் பொருள் அதிகாரம் (முதற்பதிப்பு). அண்ணாமலை பதிப்பு. அண்ணாமலை நகர், சிதம்பரம்.
8. சுப்புரெட்டியார். க. (1988). தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை. ஐந்திணை பதிப்பகம். சென்னை.